விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 122 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 07 வியாழக்கிழமை (20.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஆசிரியர்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

வினாத்தாள் மதிப்பீட்டு பணிக்கு செல்ல மறுத்தால் கல்விச் சேவை அத்தியாவசிய சேவையாக மாற்றப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கல்வி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

15

## தமிழர் தாயகத்தில் அன்னை பூபதியின் 35ஆம் ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலிருந்து இந்திய படையினை வெளியேறக்கோரியும் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தியும் மட்டக்களப்பில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகதீபம் அன்னை பூபதியின் 35ஆம் ஆண்டின் இறுதி நாள் நினைவேந்தல் நேற்று தமிழர் தாயகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்குக் கிழக்கின் பல மாவட்டங்களில் நேற்று நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்னைபூபதியின் குடும்ப உறவுகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்களை கொண்ட

15



# நாட்டில் மலேரியா பரவும் அபாயம்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் மலேரியா பரவும் அபாயம் காணப்படுவதாக மலேரியா நோய்க் கட்டுப்பாட்டு இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் அவ் இயக்கம் எச்சரித்துள்ளது.

மலேரியா பரவும் நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்களிடம் இருந்து மலேரியா பரவும் அபாயம் உள்ளதாக அதன் பணிப்பாளர் வைத்தியர் சம்பா அளுத்வீர தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வெளிநாட்டு பணியாளர்கள், இரத்தினக்கல் வியாபாரிகள் மற்றும் அமைதி காக்கும் படையினர் மற்றும் வெளிநாடு செல்லும் மக்கள் ஊடாக மலேரியா நாட்டிற்குள் வரக்கூடும் என வைத்தியர் குறிப்

15

## காங்கேசன்துறை – காரைக்கால்
## கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் இந்தியாவின் அனுமதியில் தாமதம்

(கொழும்பு)

காங்கேசன்துறைக்கும் - காரைக்காலுக்கும் இடையில் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் இந்தியாவின் அனுமதியில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு தேவையான அனுமதிகளை வழங்கியுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும்பிற தொடர்புடைய

15

## கொரோனாத் தொற்று
## யாழ்.போதனாவில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற வந்த முதியவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் புத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிய வருகிறது. (ம-7,9)

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான
மேல் மாகாண. கல்வித் திணைக்களத்தின்
பரீட்சை வினாத்தாள்
உள்ளே

தேர்தல் நடத்தப்படாது வர்த்தமானி வெளியீடு
(05ஆம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்சினையை திசை திருப்ப தமிழர் தாயகத்தில் புத்தர் சிலை
### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு



(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் திசை திருப்ப தமிழர் தாயகத்தில் புத்தர் சிலைகள் நிறுவப்படுவதாக சிறீதரன் எம்.பி குற்றம் சுமத்தியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற அன்னை பூபதியின் நினைவு நிகழ்வில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

15

## க.பொ.த (சா/த) நேர அட்டவணை வெளியாகியது

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நேர அட்டவணை வெளியாகியது.

இதன்படி மே மாதம் 29ஆம் திகதி பரீட்சைகள் ஆரம்பமாகி ஜூன் மாதம் 8ஆம் திகதி பரீட்சைகள் முடிவடையவுள்ளன. (ம-7,9)

## மகன் தாக்கியதில் தந்தை உயிரிழப்பு
### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மயில்வாகனபுரம் கொழுந்து புலம்பு பகுதியில் மகன் தாக்கியதில் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் பிச்சைமுத்து

15

## குரங்குகளை நாம் கோரவில்லை
### பல்டி அடித்த சீனத் தூதரகம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து 100,000 குரங்குளை கொண்டு வருமாறு எந்தவொரு தரப்பினரும் இலங்கை அதிகாரிகளிடம் கோரிக்கையை முன்வைக்கவில்லை என சீனத் தூதரகம் தனது வெளியீட்டில் தெரிவித்துள்ளது.

சீன் தேசிய வனவியல் மற்றும் புல்வெளி நிர்வாகத்திடம் அத்தகைய் கோரிக்கையை தாம் முன்வைக்கவில்லை எனவும் அதில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, வனவிலங்குகளின் பாதுகாப்பிற்கு சீனா எப்போதும் முன்னுரிமை அளிப்பதாகவும், இது தொடர்பான சர்வதேச பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தீவிரமாக பங்களிப்பதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை,

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2023/ 2024

**Maintenance & Services of Air Conditioners in the**
**OFFICE OF THE REGIONAL DIRECTOR OF HEALTH SERVICES, KILINOCHCHI**

1. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified Applicants for **"Maintenance & Services of Air Conditioning Systems at Regional Director of Health Services, Kilinochchi, for the year 2023/2024"** as described below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and bidder shall be registered under 'EM5 or above' grade in air conditioning specification at Construction Industry Development authority (CIDA) and Business Registration for supply and maintenance of Air conditioners.
4. Interested bidders may obtain further information from **address given below in 5,** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 A.M to 3.00 P.M.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Director of Health Services, Kilinochchi , Kandy Road, Kilinochchi . (T.P: 021 228 5932/ 021 2285719, Fax: 021 2285931) from 9.00 A.M to 3.00 P.M during the period mentioned in the table** upon payment of non-refundable fees as mentioned in the table.The method of payment should be by cash.
6. Bids (Original, Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Director of Health Services, Kilinochchi , Kandy Road ,Kilinochchi on or before on the date mentioned in the table.** Bid number must be written on the left-hand upper corner of envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Meeting will be held at **Regional Director of Health Services, Kilinochchi, Kandy Road, Kilinochchi** commencing at **on the date mentioned in the table.**
8. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| CATEGORY 1 | Document Issuing/Purchasing Period | | From20.04.2023 until 09.05.2023 | | |
|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | at 11.00A.M on 27.04.2023 | | |
| | Closing and Opening of Bids | | at 10.30 A.M on 10.05.2023 | | |
| Bid No | Description of Work | Required Grade | Non Refundable Fees | Required Bid Security | |
| | | | | Security Amount | Valid Period |
| NP/KOC/RDHS/ AC/2023 | Maintenance & Services of Air conditioners | EM5 or Above | 2,000.00 | 50,000.00 | 25.07.2023 |

**Chairman,,**
**Regional Procurement Committee,**
**Office of the Regional Director of Health Services,**
**Kilinochchi.**
**TP- 0212285719, Fax- 0212285931**
**Email - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com**

(C-6390)

# REGIONAL DIRECTOR OF HEALTH SERVICES, KILINOCHCHI

**INVITATION FOR BIDS (IFB)**
**Supply of Medical Equipment**

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the Regional Director of Health Services, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the Suppliers, goods as specified described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements.
   (a) Bidders shall have valid business registration
   (b) and business registration for supply of respective Supplies and Service.
4. Interested bidders may obtain further information from **address given below in 6,** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 A.M to 3.00 P.M.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Office **of the Regional Director of Health Services, Kandy Road, Kilinochchi . (T.P: 021 228 5932 021 2285719, Fax: 021 2285931) from 9.00 A.M to 3.00 P.M during the period mentioned in the table** upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
6. Bids (Original, Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Director of Health Services, Kilinochchi, Kandy Road ,Kilinochchi** on or before **11.30 A.M on the date mentioned in the table.** Bid number must be written on the left-hand upper corner of envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Meeting will be held at **Office of the Regional Director of Health Services, Kandy Road, Kilinochchi** commencing at **10.00A.M on the date mentioned in the table.**
8. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| CATEGORY | Document Issuing/Purchasing Period | | From20.04.2023until 09.05.2023 | | |
|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | at 10.00A.M on28.04.2023 | | |
| | Closing and Opening of Bids | | at 2.00 P.M on 10.05.2023 | | |
| Bid No | Item | QTY | Non Refundable Fees | Required Bid Security | |
| | | | | Security Amount | Valid Period |
| NP/KOC/RDHS/PSSP/ME/1 | Infant Warmer | 02 | 2,000.00 | 75,000.00 | 21.08.2023 |
| | Transport Incubator | 01 | | | |
| NP/KOC/RDHS/PSSP/ME/2 | Mortuary Cooler | 01 | 2,000.00 | 30,000.00 | 21.08.2023 |
| NP/KOC/RDHS/PSSP/ME/3 | Dental Chair | 01 | 2,000.00 | 12,500.00 | 21.08.2023 |

**Chairman,,**
**Regional Procurement Committee,**
**Office of the Regional Director of Health Services, Kilinochchi.**
**TP- 0212285719, Fax- 0212285931 E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com**

(C-6389)

# மரண அறிவித்தல்



பிறப்பு 1942 - 12 - 14

இறப்பு 2023 - 04 - 19

## திருமதி
## செல்வரத்தினம் அன்னலட்சுமி

மில் ஒழுங்கை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் அன்னலட்சுமி அவர்கள் நேற்று (19.04.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - பரிபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, இலட்சுமணன், கந்தசாமி, நகுலாம்பிகை மற்றும் பரஞ்சோதி (வேவி), கனகசுந்தரம் (ராசா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான தம்பித்துரை, சபாரட்ணம், நவரட்ணம், பஞ்சலிங்கம் மற்றும் குமுதினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் லக்ஸ்மன், கம்ஷாயன், கஜானா, யதுர்ஷாயன் ஆகியோரின் அன்பு அத்தையும் சுதர்சினியின் பெரியதாயும் டுர்க்காயினி, நித்திக்ஸ்மன், அட்சர்னி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.04.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மில் ஒழுங்கை,
மல்லாகம்.

076 603 9767

தகவல் :
குடும்பத்தினர்

(15412)

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 - 03 - 1937

மறைவு 17 - 04 - 2023

## வயிரமுத்து கதிர்காமநாதன்
### (ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்)

பெரிய நாவலடி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் பெரிய நாவலடி ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தாவுமாகிய வயிரமுத்து கதிர்காமநாதன் அவர்கள் கடந்த 17.04.2023 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வயிரமுத்து - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும் சின்னையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் கௌரிமாலா (Bharin), நகுலேஸ்வரன் (USA), ஜெகதீஸ்வரன் (USA), நந்தினி (Canada), ஜெயந்தினி (USA), ஜெயகௌரி (SDO, Varani) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் சிற்றம்பலம், சறோஜா (USA), அபிராமசுந்தரி (USA), சிவபாலன் (Canada), நந்தகுமாரன் (USA), ஜெயகுமார் (Postman - Kodikamam) ஆகியோரின் மாமனாரும் கௌசல்யா, குருபரன், ஹரிகரன், அட்சிகா, ஐஸ்வர், தட்சிகா, லிந்துஜா, விபுநந்தா, விபுலா, விஸ்னிகா, பிரதுஷன், லக்சிகா, ரிசானுகா, ரிசிகேசன் ஆகியோரின் பேரனும் அபிநாஷின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: 077 801 2258, 077 711 1241,
கொடிகாமம்

(C-6392)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக வெப்பநிலையால் இதயநோய் அதிகரிக்கும் ஆபத்து

## ஆயுர்வேத மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**அதிக வெப்பநிலையால் பக்கவாதம் மற்றும் இதய நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகம் என அரசாங்க ஆயுர்வேத மருத்துவர் சங்கத்தின் சமூக சுகாதார செயலாளர் மருத்துவர் சேனக கமகே தெரிவித்துள்ளார்.**

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் திறந்த வெளியில் பணிபுரிபவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் மருத்துவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நாட்களில் பல்வேறு பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகிறது. எனினும் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெளிப்புற விளையாட்டுகளை தவிர்க்குமாறும் தெரிவித்தார்.

மேலும், தர்ப்பூசணி, ஆரஞ்சு, தேங்காய், தண்ணீர் போன்ற உள்ளூர் பானங்களை முடிந்த வரை அருந்துவது நல்லது. மேலும் குழந்தைகளுக்கு நீர்ச்சத்து குறையாமல் இருக்க கொத்தமல்லி, கஞ்சி போன்றவற்றை வழங்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

# பால் மாவின் விலை மேலும் குறையும்

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் பால் மாவின் விலைகளை மேலும் குறைப்பதற்கு நாட்டிலுள்ள பிரதான பால் மா இறக்குமதி நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன என வுர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பால் மா இறக்குமதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பான அறிக்கை விரைவில் வர்த்தக அமைச்சகத்துக்கு அனுப்பப்பட உள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் சமூக வலைத்தள பதிவொன்றில் தெரிவித்துள்ளார். (நி)

# எறிகணை மீட்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி விவேகானந்தர் நகர் பகுதியில் கடந்த வாரம் வீட்டுக்கு அத்திவாரம் வெட்டும் போது மண்ணில் புதையுண்ட நிலையில் எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி விவேகானந்த நகர் தாய் தந்தையரை இழந்த சிறுவன் ஒருவருக்கான வீட்டினை கொடையாளர் ஒருவரின் உதவி மூலம் அமைக்கும் பொருட்டு கடந்த வாரம் அத்திவாரம் வெட்டும் போது மண்ணில் புதையுண்ட நிலையில் குறித்த எறிகணை மீட்கப்பட்டது.

இதுதொடர்பாக பகுதி கிராம அலுவலருக்கு அறிவிக்கபட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார், இராணுவத்தினர், கண்ணிவெடியகற்றும் பிரிவினர் சென்று பார்வையிட்டும் கடந்த எட்டு நாட்களுக்கு மேலாக குறித்த வெடிபொருள் அகற்றப்படாத நிலையில் காணப்படுகிறது. (4-6-315)

# நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்ய சர்வதேச உதவிகள் தேவை

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி



(கொழும்பு)

மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக சர்வதேச நாணயநிதியத்துடனான ஈடுபாடுகள் ஒரு சிறப்பான வெற்றிகரமான முயற்சியாக காணப்படும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி குறிப்பிட்டுள்ளார்.

மிக நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு எங்களிற்கு சர்வதேச உதவிகள் தேவை என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் நாங்கள் இந்தியாவுடன் மேலும் ஒன்றிணைவை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம்,

இதனடிப்படையில் நாங்கள் இந்தியாவுடனான விமான சேவைகளை அதிகரிக்க முயல்கின்றோம். நாங்கள் விரைவில் இந்தியா-இலங்கை படகுச் சேவையை ஆரம்பிப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனியொரு பிராந்திய கூட்டமைப்புடன் மாத்திரம் இணைந்து செயற்பட விரும்பவில்லை. நாங்கள்சீனாவுடன் மேற்குலக மத்திய கிழக்கு நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபட விரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# தட்டுப்பாடான மருந்துகள் தனியாரிடமிருந்து கொள்வனவு

(கொழும்பு)

நாட்டில் உள்ள மருத்துவ மனைகளில் தட்டுப்பாடு நிலவும் 60 வகையான மருந்துகளை தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது மருந்து பற்றாக்குறை படிப்படியாகக் குறைவடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் கரைச்சி பிரதேச செயலர் வசமாகியது



2022 ஆம் ஆண்டுக்கான கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் விளையாட்டுப் போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கரைச்சி பிரதேச செயலர் அணி கைப் பற்றியது.

அதேவேளை, இரண்டாம் இடத்தினை பூநகரி பிரதேச செயலக அணி பெற்றுக் கொண்டது.

அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட முற்றவெளி மைதானத்தில் பி.ப 1.30மணிக்கு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில், ஊழியர் நலன்புரி சங்கத் தலைவர் திருமதி. லி.கலாஜினி தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் கலந்து சிறப்பித்திருந்தார்.




மேலும் விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) ந.திருலிங்கநாதன், திட்டமிடல் பணிப்பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன், பிரதம கணக்காளர் சி.கஜேந்திரன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் வே.கலைச்செல்வன், பச்சிலைப்பள்ளி



பிரதேச செயலாளர் ச.கிருஸ்ணேந்திரன், கரைச்சி பிரதேச செயலாளர் பா.ஜெயகரன், கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன், பூநகரி பிரதேச செயலாளர் த.அகிலன், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், உதவி மாவட்ட செயலாளர் ஜெ.றெமின்ரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த அரச அதிபர் வெற்றிக் கிண்ண தொடரின் இறுதிநாள் நிகழ்வில் ஆண், பெண்களுக்கான 100m ஓட்டப்போட்டி, 200m ஓட்டப்போட்டி, கலப்பு அஞ்சல் ஓட்டம், குண்டு எறிதல், ஆண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி, கயிறு இழுத்தல் இறுதிப் போட்டி, மெதுவான சைக்கிள் ஓட்டம், பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான போட்டி, விருந்தினர்களுக்கான போட்டி உள்ளிட்ட நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

நிகழ்வின் இறுதியில் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத் தொடரின் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

(4-6-315)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2813

அபிராமி




துரியோத்




மகிசா




நிஷானி




விநுயா





சஞ்சை




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தமிழர்களுக்காக அகிம்சை வழியில் போராடி தன்னுயிரினை ஈகம் செய்த தியாகத்தாய் அன்னை பூபதி அம்மாவின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று நல்லூரடியில் உள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில் காலை நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்)

## இலங்கையில் இணையவழி வருகை அட்டை முறை அறிமுகம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் இணையவழி வருகை அட்டை முறையை அறிமுகப் படுத்தியுள்ளது.

வெளிநாட்டுப் பார்வையாளர்கள் இலங்கைக்கு வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக இதனை நிரப்ப முடியும்.

பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் இலங்கைக்கான தனது ஆலோசனையை புதுப்பித்துள்ள ஆலோசனையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன் எரைவல் என்ற வருகைத்தரு விசா வசதிகள் உள்ளபோதும், பயணத்திற்கு முன் வருகை அட்டைக்கு விண்ணப்பிப்பது பயணத்தை எளிதாக்குவதற்கும் வருகையில் தாமதங்களைத் தடுப்பதற்கும் உதவும் என்றும் பிரித்தானிய அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## 25 தேர்தல் நடத்தப்படாது; வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

25 ஆம் திகதி திட்டமிட்டபடி உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாது என அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளனர்.

திறைசேரி நிதி ஒதுக்கீடு செய்த பின்னரோ அல்லது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்புக்குப் பின்னரோ தேர்தலுக்கான புதிய திகதி அறிவிக்கப்படும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சித் தேர்தலை காலவரையறையின்றி ஒத்தி வைத்த நிலையில் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

20.04.2023
சித்திரை 07, வியாழக்கிழமை,
அமாவாசை முற்பகல் 10.28 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 12.04 மணிவரை
சுபநேரம் -7.32-9.02 மணிவரை
இராகுகாலம்-1.32-3.02 மணிவரை
அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - பூரம், உத்தரம்.

வளவன்

**மேஷம்** கனவுப் பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்,குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** உறவினர் நண்பர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்,சேமிப்பில் சிறிது கரையலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், சயனசுகக் குறைவான நாள்.

**சிம்மம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** எண்ணிய காரியங்களில் உடனுக்குடன் நிறைவேறும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் வாய்ப்புண்டு.

**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, தேக நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்,இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எதிர்பாராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம்.

வாழ்வு காலத்தில் நன்மையை அனுபவித்திடு. தாழ்வு காலத்தில் சிந்தனை செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளின் ஏற்பாட்டில் அரசுக்கு எதிராக யாத்திரை

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சிகளின் ஏற்பாட்டில் அரசாங்கத்துக்கு எதிரான யாத்திரை நேற்று யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்ற வழிபாடுகளுக்கு பின்னர் ஆரம்பித்தது.



இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஐக்கிய மக்கள் கட்சியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திர பிரகாஷ் உட்பட கட்சியின் அமைப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக கையெழுத்து சேகரிப்பும் இடம்பெற்றது. அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக நடைபெறவுள்ள குறித்த யாத்திரை யாழ்ப்பாணம், மன்னார், காத்தான்குடி, கண்டி மற்றும் கதிர்காமம் ஆகிய ஐந்து இடங்களில்,இருந்து 'பாசத்திற்கான யாத்திரை' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையில் நாட்டின் 5 இடங்களில் இருந்து ஆரம்பமாகும் 'பாசத்திற்கான யாத்திரை' நாளை 21 ஆம் திகதி கொழும்பை சென்றடையவுள்ளது. (4-6-33)

# முகாமைத்துவ பீட

## புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு, பதிவுகளை மேற்கொண்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி, புதன்கிழமை காலை 9 மணி முதல் ஆரம்பமாக வுள்ளன.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, முகாமைத்துவம் மற்றும் வணிகம் ஆகிய கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வுகள் அன்றைய தினம் ஆரம்பமாக வுள்ளன.

திருநெல்வேலி கிழக்கு - கலாசாலை வீதியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள், வணிக பீட கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு தொடர்பான அறிவுறுத்தல்கள் பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குத் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் மற்றும் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் www.maco.jfn.ac.lk என்ற இணையத்தளத்தில் விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் 2021/2022 கல்வியாண்டுக்காகப் பதிவு செய்த சகல மாணவர்களையும் இந் நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறும் பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார். (4-6-33-104)

# யாழ்.மாநகரசபை முன்பாக ஒருவர் உண்ணா விரதம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு முன்பாக நபர் ஒருவர் நேற்று புதன்கிழமை காலை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக் குட்பட்ட பருத்தித்துறை வீதியில் வசிக்கும் குறித்த நபரின் வீட்டிற்கு அருகில் அனுமதி பெறப்படாத கட்டடம் ஒன்றும் உள்ளதாகவும் அந்த கட்டடத்தின் கழிவு நீர் தன்னுடைய வீட்டிற்குள் வருவதாகவும் இதனை மாநகரசபையிடம் பல்வேறு தடவைகள் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் இதனாலேயே ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார்.

தனக்கான தீர்வு கிடைக்கப் பெறவில்லை என்றால் வரும் காலத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தார். (4-6-33)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் 29 ஆம் திகதி அன்று காலை 9 மணிக்கு மணல், கிரவல், மக்கி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை, குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறவுள்ள இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 8 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (4)



பூமணி அம்மா அறக்கட்டளை மற்றும் சர்வதேச தமிழ் வானொலியின் ஆதரவாளர்களும் அபிமானிகளுமான கனடா மொன்றியலைச் சேர்ந்த மோகனதாஸ், திருமதி. மோகனதாஸ் சாந்தகுமாரியின் நிதிப்பங்களிப்பில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப்பகுதியில் உள்ள 45 பாடசாலைகளில் இவ்வாண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள ஆயிரம் மாணவர்களுக்கான மாதிரி வினாத் தாள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி யா/செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை மண்டத்தில் இடம்பெற்றது.

# கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பனை தென்னை வள.அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவு சங்கம் நடத்தும் அங்கத்துவ சங்கங்களில் 25 வருட கால சேவை பூர்த்தி செய்த பணியாளர்களை கௌரவித்தல், ஓய்வு பெற்ற பணியாளர்களை கௌரவித்தல் ஆகிய நிகழ்வுகள் நாளை முற்பகல் 10 மணிக்கு சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சங்கத் தலைவர் லி. நிர்மலன் தலைமையில் இடம் பெற உள்ளது. (4-6-110)


# வாகன திருத்தகம் மீது வெடிகுண்டு வீச்சு

## யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் உள்ள வாகன திருத்தகம் ஒன்றின் மீது இனம் தெரியாத நபர்கள் வெடிகுண்டு ஒன்றினை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீசியுள்ளனர். குறித்த வெடிகுண்டு வாகன திருத்தகத்தில் நின்ற கார் ஒன்றின் மீது விழுந்து வெடித்துள்ளது. அதனால் காரில் சிறு சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்தனர்.



குறித்த வெடிகுண்டு உள்ளூர் தயாரிப்பாக இருக்கலாம் என்றும் அது பெரியளவிலான சேதங்களை விளைவிக்க கூடியவாறு காணப்படவில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிய வருகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-33)

# தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி



(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் ஏற்பாட்டில் தொற்றா நோய்களுக்கு எதிரான உடல் அசைவு மாதத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை காலை விழிப்புணர்வு நடைபவனி மேற்கொள்ளப்பட்டது.

"சிறந்த உடற்செயற்பாடும்-ஆரோக்கியமான சுற்றாடலும்" எனும் கருப்பொருளில் இடம்பெற்ற விழிப்புணர்வு நடைபவனியானது சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்றலில் ஆரம்பித்து ஏ-9 வீதி ஊடாக பயணித்து சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்தில் நிறைவடைந்தது. (4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம் 129

## இளைஞனின் சாதூரியமான பேச்சால்...

வேலை வாய்ப்பினை தேடி சொந்த ஊரில் இருந்து அருகில் உள்ள நகரத்திற்கு வந்திருந்தான் வேலையில்லா பட்டதாரியான இளைஞன் ஒருவனை வறுமையும் வேலையின்மையும் அவனை வாட்டி எடுக்க, சுட்டெரிக்கும் வெயிலில் சொட்டு தண்ணியில்லாமல் வேலை தேடி அலைந்து திரிந்த அந்த இளைஞன் கையில் வெறும் 150 ரூபாய் மட்டுமே இருந்தது. காலை, மதியம் இருவேளையும் சாப்பிடாமல் இருந்த பணத்தை பாதுகாத்து வைத்திருந்தான்.

பசி வயிற்றைக் கிள்ளினாலும் தினம் ஒரு வேளை உணவுதான் என்பதை வறுமை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறது. தெருத்தெருவாக அலைந்து திரிந்து வேலை கிடைக்காமல் இரவு 8 மணி பேருந்துக்காக ஏழு மணியளவில் பேருந்து நிறுத்துமிடமான பயணியர் நிழற்குடைக்கு வந்தவன் பசி மயக்கத்தினால் உறங்கியவன் இரவு 9.30 மணி வரை உறங்கி விட்டான். அவன் ஊருக்கு கடைசி பஸ் இரவு 9.00 மணிக்கே சென்று விடும். இதற்கு மேல் ஊருக்கு செல்ல வேண்டும் என்றால் ஆட்டோ பிடித்து தான் செல்ல வேண்டும். ஆட்டோ வாடகையோ 150 ரூபாய் கேட்பார்கள். அதை நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு பசியும் கண்ணை கட்டியது. கையில் உள்ள பணத்தில் ஊருக்கு செல்வதா? இல்லை வயிற்றை நிரப்புவதா? அல்லது ஊருக்குச் சென்றாலும் பசியோடுதான் தூங்கவேண்டும் என குழம்பிப் போய் நின்றான்.

பசி அனைத்து உணர்வுகளையும் வென்றது. ஒரு ஹோட்டலுக்குள் நுழையும் முன் இங்கே ஹோம் டெலிவரி வசதிகள் உள்ளன என்று போர்டை படித்துக் கொண்டே உள்ளே சென்றான்.

ஹோட்டல் கடையின் மேலாளரிடம் எனக்கு ஒரு சிக்கன் பிரியாணி எனக் கேட்க, 130 ரூபாய், போய் உட்கார்ந்து சாப்பிடுங்கள் என்றார். அந்த இளைஞனோ இல்லை, இந்த பிரியாணியை நான் சொல்லும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் என்றான். ஹோம் டெலிவரி என்றால் 150 ரூபாய் சிக்கன் பிரியாணி என்றார். அந்த இளைஞனோ பிரச்சினை இல்லை என்றான்.

அந்தப் பிரியாணியை பார்சல் செய்து அதை அங்கு வேலை பார்க்கும் ஒரு ஊழியரிடம் கொடுத்து ஹோம் டெலிவரி செய்து விட்டு வருமாறு கூறியதைப் பார்த்து கொண்டே இருந்த இளைஞன் அந்த பார்சலை பெற்றுக் கொண்ட ஊழியரை கவனமாக பின் தொடர்ந்து சென்றான்.

அந்த டெலிவரி பாய் தன்னுடைய மோட்டார் சைக்கிளை நகர்த்தும் போது, நான் தான் இந்த பார்சலை ஆர்டர் செய்தேன். இதோ அந்த பில் என்று காட்டினார். என் வீட்டில் என்னை தவிர இப்போது யாருமில்லை. நான் போனால் தான் இந்த பார்சலை வாங்க முடியும். எங்கள் ஊரின் கடைசி பேருந்து 9 மணிக்கே சென்று விட்டது.இப்போது எனக்கு வேறு வழியில்லை, என்னை உங்கள் வண்டியில் ஏற்றிக் கொண்டு என் வீட்டில் விட்டு விடுவீர்களா? உங்களுக்கு உங்கள் வேலையும் முடிந்தது போல் இருக்கும் எனக்கும் வீட்டுக்கு சென்றது போல் இருக்கும் என்றான்.

கொஞ்சம் யோசித்த டெலிவரி பாய், மனிதாபிமான அடிப்படையில் அவரை வண்டியில் ஏற்றிக் கொண்டு அவருடைய வீட்டுக்கு சென்று உணவையும் கொடுத்து இளைஞனை இறக்கி விட்டான். தன்னுடைய யதார்த்தமான பேச்சாலும் புத்திசாலித்தனத்தாலும் அந்த இளைஞன் வீடு சென்று சேர்ந்தான்.

மதியால் விதியை வெல்லலாம். புத்திசாலித்தனமான சற்றே சாதூரியமான பேச்சால் வாழ்க்கையில் நினைத்ததை எளிதில் அடைய முடியும் என்பதையே இந்த கதை உணர்த்துகிறது. ஒரு வேலையில்லா பட்டதாரியின் வாழ்க்கையானது மிகவும் கடினமானதே. வேலை என்பதே இங்கு பிரதானம். அதிலும் பசி என்பது அனைத்து உணர்வுகளையும் வெல்ல கூடியது.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# சட்டவிரோத மீன்பிடி ஆறு பேர் விளக்கமறியல்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட இழுவை மடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட ஆறு பேரையும் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட கடல் பரப்பில் உள்நாட்டில் தடை செய்யப்பட்ட இழுவை மடிவலைகளை பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்ட 6 பேர் நேற்று முன்தினம் மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நேற்று பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நீதிமன்ற நீதிவான் ஜெகநாதன் சுபராஜினி முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த ஆறு பேரையும் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.(4-6-315-316)

# வவுனியாவில் அதிகளவு ஏக்கரில் இம்முறை சிறுபோக நெற்செய்கை

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் இவ்வருடம் 22948.68 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை இடம்பெற்று வருகின்றது.

கடந்த 2022 ஆம் வருடம் 12 ஆயிரத்து 238 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் குளங்களில் உள்ள நீரின் அளவு மற்றும் புதிதாக நெற்செய்கையினை மேற்கொள்வதற்கு காணிகள் விவசாயிகளால் தயார்ப்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால் வவுனியா மாவட்டத்தில் அதிகளவிலான ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, சிறுபோக நெற்செய்கைக்கான பசளை வழங்குவதற்குரிய நடவடிக்கையினை அப்பகுதிக்குரிய கமநல சேவைத் திணைக்களங்களின் ஊடாக நடவடிக்கையினை அரசாங்கம் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-250)

# கிளிநொச்சியில் அன்னை பூபதியின் நினைவு தினமும் உண்ணா நோன்பும்



(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் அன்னை பூபதி நினைவு நாள் நிகழ்வும் கவனயீர்ப்பு உண்ணாவிரத போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி சேவைச்சந்தை முன்பாக பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது, அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நாட்டில் இடம்பெற்று வரும் தொல்பொருள் இடங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி அடையாள உண்ணாவிரத போராட்டமும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-100-315)

# வவு.வாள்வெட்டு ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட இருவர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தி கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

புத்தாண்டு தினத்தன்று இரவு 8.30 மணியளவில் வவுனியாவில் இருந்து பூவரசன்குளம் நோக்கி மோட்டர் சைக்கிளில் சென்ற 8 மாத கர்ப்பிணிப் பெண் மற்றும் அவரது தாயார் மீது பம்மைமடுப் பகுதியில் வைத்து வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்கள் அணிந்திருந்த 6 அரைப் பவுண் நகை மற்றும் ஒன்றரை லட்சம் ரூபாய் காசு என்பன கொள்ளையிடப்பட்டிருந்தன.


காயமடைந்த கர்ப்பிணிப் பெண் மற்றும் தாய் ஆகியோர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பூவரசன்குளம் பொலிஸார் 30 வயதுடைய இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.(4-6-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 320 | 250 | 300 | 330 |
| தக்காளி | 100 | 120 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 160 | 150 | 180 | 250 |
| கரட் | 150 | 200 | 150 | 300 |
| பூசணி | 60 | 70 | 50 | 40 |
| புடோல் | 150 | 120 | 140 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 250 |
| வெண்டக்காய் | 250 | 250 | 160 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 140 | 100 | 120 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 320 |
| பீற்றூட் | 160 | 200 | 180 | 160 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 | 320 |
| முருங்கைக்காய் | 450 | 700 | 400 | 650 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 280 | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 500 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | 480 |
| முள்ளங்கி | 60 | 100 | — | 50 |
| பொன்னாங்காணி | .80 | 120 | — | 50 |
| வல்லாரை | 40 | 25 | .20 | 50 |
| ஈரப்பலா | 80 | — | — | 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருசுவில் வடக்கில் வெளிவந்த செப்புத் திருமேனிகள் கண்டவையும் காணாமல் போனவையும்



கடந்த வாரம் ஊடகங்களில் வெளிவந்த முக்கிய செய்திகளில் ஒன்றாக மிருசுவில் வடக்கு மன்னன் குறிச்சியின் ஒரு வீட்டு வளவில் கண்டுபிடிக்கப்பட்ட பல செப்புத் திருமேனிகள் பற்றிய செய்தி காணப்படுகின்றது. இச்செய்தியைத் தொடர்ந்து இச்சிலைகள் பற்றி மாறுபட்ட தகவல்களும் பல ஊகங்களும் முகநூல்களில் வெளிவந்தன. இந்நிலையில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த எனது மாணவனும் தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தருமான திரு.கமலநாதன் கயிலைவாசன் எடுத்த முயற்சியால் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்குச் சென்று சில ஆய்வுகளையும் தகவல்களையும் பெற முடிந்தன. நாம் சென்று பார்த்த போது அங்கு கிடைத்த சிலைகளுக்கு பட்டுத் துணிகள் சாத்தப்பட்டு அதற்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட சிறிய ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்தன.

அதனால் அவற்றை முழுமையாகப் பார்த்து படமெடுக்க அனுமதி தரப்படவில்லை. ஆயினும் திரு.கயிலைவாசன் எடுத்த முயற்சியால் இச்சிலைகள் பற்றிய தெளிவான படங்களையும் அவற்றின் அளவுகள் பற்றிய தரவுகளையும் பெற முடிந்தது. ஐம்பொன்னில் அமைந்த இச்செப்புத் திருமேனிகளில் அழகான பிள்ளையார், சிவலிங்கம், வராகி அம்மன், பார்வதி பரமேஸ்வரன், மயிலுடன் இணைந்த ஆறுமுக சுவாமி, ஆறுமுக சுவாமி பீடம், பெரிய, சிறிய ஐந்து தலை நாகங்கள், ஒரு தலைநாகம் என்பன முக்கியமாகக் காணப்படுகின்றன. இச்சிலைகள் சராசரியாக 32 சென்றிமீற்றர் தொட்டு 16 சென்றிமீற்றர் உயரம் கொண்டவை.

நாம் சென்ற நேரத்தில் இச்சிலைகளைப் பார்வையிடப் பல இடத்து மக்களும் அவ்விடத்திற்கு வந்து கொண்டிருந்தனர். அவர்களை அன்புடன் வரவேற்று அவர்களுக்கு அன்னதானம் வழங்க வீட்டு உரிமையாளர்கள் தடபுடலான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். இவ்விடத்தைப் பார்வையிட வந்த அவ்வூர் மக்கள் இச்சிலைகள் காணப்பட்ட இடத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தென்னை மரத்தின் பாழை, பிள்ளையார் வடிவில் இருந்ததாகவும் பின்னர் அம்மரம் பட்டுப் போனதாகவும் கூறினர்.

அவ்வடிவத்தைத் தானும் சிறு வயதில் பார்த்ததாக என்னுடன் வந்த திரு.கயிலைவாசனும் கூறினார். வீட்டு உரிமையாளர் தான் கனவு கண்டே வீட்டுவாசலுக்கு முன்னால் இரண்டடி ஆழத்தில் நிலத்தைத் தோண்டிய போது இச்சிலைகளைக் கண்டதாகக் கூறுகின்றார். ஆனால் இச்சிலைகள் எடுக்கப்பட்ட இடத்தை ஆய்வு செய்த போது அவ்விடத்தில் ஆலய அழிபாடு களோ, பிற பொருட்களோ இருந்ததற் கான ஆதாரங்கள் எவையும் காணப் படவில்லை. பொதுவாக அசாதாரண காலகட்டங்களில் பாதுகாப்புக் கருதி தெய்வச் சிலைகளை நிலத்தில் புதைப்பது நீர்நிலைகளில் போடுவது வழக்கமாகும்.

அந்தநோக்கில் குடியிருப்பாளரிடம் வினாவிய போது தாம் இவ்விடத்தில் குடியேறிய பின்னர் இன்னொரு ஊருக்கு இடம்பெயரவில்லை எனக் கூறுகின்றார். அதற்கு முன்னரே இச்சிலைகள் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமிருப்பினும் இச்சிலைகள் கண்டெடுக்கப்பட்ட இடத்தைச் சுற்றி குடியிருப்புகளை அமைக்கவும் மரங்களை நாட்டவும் மண் தோண்டப்பட்டிருக்கும் சூழலில் இச்சிலைகளைக் கண்டுபிடிக்க அதிக வாய்ப்பிருந்துள்ளது. இந்நிலையில் இச்சிலைகளின் கலை மரபை நோக்கும் இவற்றின் காலம் அதிகம் பழைமையானதாகவும் தெரிய வில்லை. இந்நிலையில் சிலைகளுக் குரிய புகைப் படங்களை பேராசிரியர் பொ.இரகுபதி அவர்களுக்கு அனுப்பி அவரிடம் கருத்துக் கேட்டபோது யாழ்ப்பாணத்தில் வழக்கமாகப் பயன்பாட்டிலிருந்த சாமிப் பெட்டிகளில் வைக்கப் பட்டிருந்த சிலைகளாகவே இவையும் இருந்திருக்கலாம் எனக் கூறியிருந்தார்.

பொதுவாக மூன்றாம் தீட்சை பெற்ற ஒருவர் தனது சாமிப்பெட்டியில் வைக் கப்பட்டிருக்கும் தெய்வச் சிலைகளை வெளியே எடுத்துப் பூசை செய்ததன் பின்னரே உணவருந்தும் வழக்கம் உண்டு. இவ்வழக்கம் வரணிச் சைவக் குருக்களிடம் அதிகமாகக் காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் முக்கிய ஆலயத் திருவிழாக்களில் தீட்சை பெற்ற பலர் சாமிப் பெட்டிகளுடன் வந்து பூசைகளில் கலந்து கொள்ளும் மரபு காணப்படுகின்றது.

தற்போதும் மன்னன் குறிச்சி ஆலயத்திலும் இவ்வாறான சாமிப்பெட்டி இருந்ததாகவும் இருப்பதாகவும் அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். இவ்வாறான சாமிப் பெட்டிகள் பிற்காலத்தில் தொலைந்து போன சம்பவங்களும் உண்டு. மிருசுவிலில் கண்டுபிடிக் கப்பட்ட மேற்கூறப்பட்ட சிலைகளை ஒரு சிலர் தகரப் பெட்டியுடன் கிடைத்த தாகவும் வேறு சிலர் மரப்பெட்டியுடன் கிடைத்ததாகவும் கூறுகின்றனர். ஆனால் வீட்டு உரிமையாளர் இவை குழிக்குள் தனித் தனியாகவே இருந்ததாகக் கூறுகின்றார். ஆனால் இச்சிறு குழியைச் சற்று அகலமாக அகழ்ந்து பார்த்தால் இச்சிலைகள் வைக்கப்பட்ட பெட்டி கிடைக்கலாம். அவ்வாறு கிடைத்தால் அச்சாமிப் பெட்டியின் உரிமையாளர் பெயரை அடையாளம் காண லாம். அப்பெயரின் எழுத்தை வைத்து சிலைகளின் காலத்தைக் கணிக்கலாம்.

பரமு.புஸ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
பேராசிரியர்
யாழ்.பல்கலைக்கழகம்

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 1

### காவியத் தொடர் 157





எல்லாவற்றையும் நீ மறந்து விட்டாய்! பழுவூர் அரண்மனையின் சுகபோகத்தில் அழுந்தி உன் சபதத்தை மறந்து விட்டாய்! அறுசுவை உண்டி அருந்தி, ஆடை ஆபரணங்கள் புனைந்து, சப்ரகூட மஞ்சத்தில் பட்டு மெத்தையில் உறங்கி தந்தப் பல்லக்கில் பிரயாணம் செய்யும் ராணி நீ! உனக்குப் பழைய ஞாபகங்கள் எப்படி இருக்கும்?"

"சீச்சீ! இந்த மஞ்சமும் மெத்தையும் ஆடை ஆபரணமும் யாருக்கு வேண்டும்? இந்த அற்ப போகங்களுக்காகவா நான் உயிர் வாழ்கிறேன்? இல்லவே இல்லை!"

"அல்லது வழியில் போகிற வாலிபனுடைய சௌந்தரிய வதனத்தைக் கண்டு மயங்கி விட்டாய் போலும்! புதிதாகக் கொண்ட மையலில் பழைய பழிவாங்கும் எண்ணத்தை மறந்திருக்கலாம் அல்லவா?" நந்தினி சிறிது துணுக்கம் அடைந்தாள். அதை உடனே சமாளித்துக் கொண்டு 'பொய்! முழுப் பொய்!" என்றாள்.

"அது பொய்யானால், நான் இன்று வரப் போவதாக முன்னதாகச் சொல்லி அனுப்பியிருந்தும் வழக்கமான இடத்துக்கு உன் தாதிப் பெண்ணை ஏன் அனுப்பி வைக்கவில்லை?"

"அனுப்பி வைத்துத் தான் இருந்தேன். உனக்கு வைத்திருந்த ஏணியில் இன்னொருவன் ஏறி வந்து விட்டான். அந்த மூடப் பெண் அவனை நீ தான் என்று எண்ணி அழைத்துக் கொண்டு வந்து விட்டாள். அது என்னுடைய குற்றமா?"

"யாருடைய குற்றமாயிருந்தால் என்ன? இன்னும் ஒரு கணத்தில் என் உயிருக்கு ஆபத்து வருவதாயிருந்தது. அந்த வாலிபனைத் தேடி வந்த கோட்டைக் காவலர் என்னைப் பிடித்துக் கொள்ள இருந்தார்கள். இந்த அரண்மனைக்குப் பக்கத்துக் காட்டிலுள்ள குளத்தில் மூச்சுத் திணறும் வரையில் முழுகியிருந்து, அவர்கள் போன பிறகு தப்பித்து வந்தேன். சொட்டச் சொட்ட நனைந்து வந்தேன்"

"உனக்கு அது வேண்டியதுதான். என்னைச் சந்தேகித்த பாவத்தை அந்த முழுக்கினால் கழுவிக் கொண்டாய்!"

"பெண்ணே! சத்தியமாகச் சொல்! அந்த வாலிபனுடைய அழகில் நீ மதி மயங்கி விட வில்லையா?"

"சீச்சீ! இது என்ன வார்த்தை! ஆண் பிள்ளைகளின் அழகைப் பற்றி யாராவது பேசுவார்களா? இந்த வெட்கங் கெட்ட சோழ நாட்டிலேதான் 'அரசன் அழகன்' என்று கொண்டாடுவார்கள். ஆண் பிள்ளைகளுக்கு அழகு உடம்பிலுள்ள போர்த் தழும்புகள் அல்லவா?"

"நன்றாக சொன்னாய் இதை நீ உண்மையாகச் சொல்லும் பட்சத்தில், அந்த வாலிப வழிப்போக்கன் இங்கு எதற்காக வந்தான்?"

"முன்னமே சொன்னேனே, நீதான் என்று எண்ணி வாசுகி அவனை அழைத்துக் கொண்டு வந்தாள் என்று." "என்னிடம் கூட நீ கொடுக்காத உன் முத்திரை மோதிரத்தை அவனிடம் ஏன் கொடுத்தாய்?"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) ஆண்டிறுதிப் பரீட்சை-2022
# கணிதம் வினாத்தாள் II

## பகுதி A

**ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. தம்ரோ காட்சியறையில் இருந்து சாப்பாட்டு மேசைத் தொகுதியை விற்கும்போது அதனை ஒரே தடவையில் பணத்தைச் செலுத்தியோ அல்லது சாப்பாட்டு மேசைத் தொகுதியின் விலையில் 12.5% தொகையை தொடக்கத்தில் செலுத்தியும் மீதியை 7 சமனான மாதத் தவணைத் தொகைகளாகவும் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். அல்ட்ரா என்பவர் ரூ. 40,000 பெறுமதியுள்ள அந்த சாப்பாட்டு மேசைத் தொகுதியை குறைந்து செல்லும் மீதி முறையில் வாங்குவார் ஆயின்.

i. அவர் செலுத்த வேண்டிய மீதிப் பணம் யாது?

ii. வட்டி செலுத்தப்படவேண்டிய மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?

iii. ஒரு மாத அலகிற்கான வட்டி ரூ. 40 எனில் ஆண்டு வட்டி வீதத்தைக் காண்க.

iv. இதேபோன்ற சாப்பாட்டு மேசைத் தொகுதியை வாங்கத் திட்டமிட்டிருந்த செல்டா என்பவர் 7 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்த 2% மாத எளிய வட்டி வீதத்தின் கீழ் சாப்பாட்டு மேசைத் தொகுதியின் விலைக்குச் சமனான கடன் தொகையை கடன் வாங்குகிறார் அல்ட்ரா, செல்டா ஆகிய இருவரின் கொடுக்கல் வாங்கல்களில் யார் அதிக பணம் செலுத்தவேண்டும் என்பதை காரணங்களுடன் கூறவும்?

2. சார்பு $y = 5-(x+1)^2$ இன் வரைபை வரைவதற்கு தயாரிக்கப்பட்ட ஒரு பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| $x$ | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | -4 | 1 | 4 | 5 | 4 | ...... | -4 |

i. $x=1$ ஆக இருக்கும் போது $y$ இன் பெறுமானத்தை காண்க.

ii. பொருத்தமான அளவிடையை தெரிந்தெடுத்து மேற்குறித்த சார்பின் வரைபை ஒருவரைபுத் தாளில் வரைக. உமது வரைபைப் பயன்படுத்தி.

iii. சார்பின் திரும்பற்புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.

iv. $y > 1$ ஆகுமாறு உள்ள $x$ இன் பெறுமான ஆயிடையை எழுதுக.

v. சமன்பாடு $x^2 + 2x - 4 = 0$ இன் மூலங்களை எழுதுங்கள். மேலும் $x = -3$ ஐ சமச்சீர் அச்சாகவும் 4 ஐ உயர்வுப் பெறுமானமாகவும் கொண்ட இருபடிச் சார்பை எழுதுக.

3. விவசாய பண்ணைச் சிற்றுண்டிச்சாலை உணவுக் கழிவுகளிலிருந்து மறுசுழற்சி மூலம் உரம் தயாரிப்பதற்கு 2 மாதங்களில் பெறப்பட்ட உணவுக் கழிவுகளின் நிறை பற்றிய தகவல்களை கொண்ட அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| உணவு கழிவுகளின் நிறை (kg) | 20 – 30 | 30 – 40 | 40 – 50 | 50 – 60 | 60 - 70 | 70 – 80 |
|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 8 | 12 | 15 | 8 | 7 | 10 |


i. அதிகூடிய நாட்களைக் குறிக்கும் உணவு கழிவுகளின் வகுப்பாயிடை எது?

ii. அதிகூடிய எண்ணிக்கையிலான நாட்களை குறிக்கும் வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு ஒரு நாளில் சேகரிக்கப்படும் உணவுக் கழிவுகளின் இடை நிறையைக் காண்க.

iii. பண்ணையில் 700 பணியாளர்கள் வேலை செய்தால், ஒரு பணியாளர் ஒரு நாளில் சேகரிக்கும் உணவுக் கழிவை g இல் காண்க.

iv. 20 kg உணவுக் கழிவைப் பயன்படுத்தி 1 kg உரத்தை உற்பத்தி செய்தால், மேலே உள்ள உணவு கழிவுகளால் உற்பத்தி செய்யப்படும் உரத்தின் நிறையை கிட்டிய kg இல் கணிக்க.

04. அடியின் ஆரை 2r ஆகவும் உயரம் 4r ஆகவும் உள்ளதுமான ஒரு திண்ம உலோக உருளையிலிருந்து ஆரை r ஆகவும் உயரம் 3r ஆகவும் உள்ள ஒரு திண்மக் கூம்பு வெட்டி அகற்றப் பட்டது.




i. எஞ்சிய திண்மத்தின் கனவளவு 60 g எனின், $r^3 = \frac{4}{\pi}$ எனக் காட்டுக.

ii. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி r இன் பெறுமானத்தை கிட்டிய இரு தசமதானங்களுக்கு கணிக்க. ( =3.14 எனக் கொள்க.)

05. 2 ஐஸ்கிறீம் கோப்பைகளையும், 3 யோக்கட் கோப்பைகளையும் கொள்வனவு செய்வதற்கு ரூ. 520 தேவை. ஐஸ்கிறீம் கோப்பை ஒன்றின் விலை ஒரு யோக்கட் கோப்பையின் விலையிலும் பார்க்க, ரூ. 10 இனால் கூடியது.


i. ஒரு ஐஸ்கிறீம் கோப்பையின் விலை ரூ. x எனவும் ஒரு யோக்கட் கோப்பையின் விலை ரூ. y எனவும் கொண்டு x,y சார்பிலான ஒருங்கமை சமன்பாட்டுச் சோடியை உருவாக்குக.

ii. அச்சமன்பாட்டுச் சோடியைத் தீர்த்து ஒரு ஐஸ்கிறீம் கோப்பையின் விலையையும் ஒரு யோக்கட் கோப்பையின் விலையையும் தனித்தனியாகக் காண்க.

iii. ஒரு குறித்த பணத்திற்கு கொள்வனவு செய்யத்தக்க யோக்கட் கோப்பைகளின் எண்ணிக்கை அப்பணத்திற்கு கொள்வனவு செய்யத்தக்க ஐஸ்கிறீம் கோப்பைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க ஒன்றினால் கூடியது எனின் அப் பணம் எவ்வளவு?

iv. பின்வரும் சூத்திரத்தில் u ஐ எழுவாயாக ஆக்குக.
$V^2=U^2-2as$

06. சரிவக வடிவமுள்ள ஓர் அடரும் அதன் அளவீடுகளும் உருவில் காட்டப்பட்டுள்ளன. அடரின் பரப்பளவு 16.5 $cm^2$ எனின், x இனால் இருபடிச் சமன்பாடு $x^2 + 3x - 9 = 0$ திருப்தியாக்கப்படுகின்றது எனக் காட்டுக. மேலும் x இன் கிட்டிய பெறுமானம் 2cm எனவும் காட்டுக. ($\sqrt{5} = 2.23$ எனக் கொள்க.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி B

**ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

07. உருவில் குறித்தவாறு இரும்பு கம்பிகளால் தயாரிக்கப்பட்ட இரண்டு பக்கங்களும் திறக்கக் கூடிய ஒரு படலையின் இரு பக்கங்களினதும் பருமட்டான படம் தரப்பட்டுள்ளது. சிறிய இரும்பு கம்பியின் உயரம் 40 cm ஆவதுடன் அடுத்த கீலத்தின் உயரம் முன்னைய கீலத்தின் உயரத்திலும் 5 cm இனால் கூடியதாக இரும்பு கம்பிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இங்கு ஒரு பக்க படலை 12 இரும்புக் கம்பிகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகிறது.



i. 12ஆவது இரும்புக் கம்பியின் உயரத்தைக் காண்க.

ii. வாயிலின் ஒருபக்க படலையை உருவாக்க பயன்படுத்தப்படும் இரும்பு கம்பிகளின் மொத்த நீளத்தை காண்க.

iii. வாயிலின் இருபக்க படலைகளையும் தயாரிக்க பயன்படுத்தப்பட்டுள்ள இரும்புக் கம்பிகளின் மொத்த நீளத்தை காண்க.

iv. 1 m நீளமுடைய இரும்புக் கம்பியின் விலை ரூபா 400 எனின் வாயிலின் இருபக்க படலைகளையும் தயாரிக்கப் பயன்படுத்திய இரும்பு கம்பிகளின் மொத்த செலவைக் காண்க.

08. பின்வரும் கேத்திர கணித அமைப்புக்காக cm/mm அளவிடை உள்ள ஒரு நேர்விளிம்பையும் ஒரு கவராயத்தையும் மாத்திரம் பயன்படுத்துக. அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டுக.

i. $PQ = 6$ cm, $P\hat{Q}R = 60^0$, $R\hat{P}Q = 60^0$ ஆகவுள்ள முக்கோணி PQR ஐ அமைக்க.


ii. P,Q ஆகிய புள்ளிகளிலிருந்து சம தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை வரைந்து கோடு PQ ஐ இடைவெட்டும் புள்ளியை M எனக் குறிக்க.

iii. PQ,PR ஆகிய கோடுகளிலிருந்து சமனான தூரத்தில் அசையும் புள்ளிகளின் ஒழுக்கை வரைந்து இரண்டு ஒழுக்குகளும் இடைவெட்டும் புள்ளியை O எனக் குறிக்க.

iv. O ஐ மையமாகவும் OM ஐ ஆரையாகவும் கொண்ட வட்டத்தை வரைக.

v. PQ,PR என்பன P இலுள்ள வட்டத்தின் தொடலிகள் என நிறுவுக.

09. ஒரு குறித்த அலுவலகத்தில் உள்ள 150 ஊழியர்கள் சாப்பிட்ட கோழி இறைச்சி, இறால், முட்டை, மரக்கறி உணவுகள் பற்றிய தகவல்களை வகைகுறிப்பதற்கு பின்வரும் வென்வரிப்படம் வரையப்பட்டுள்ளது. இதில் எல்லோரும் மரக்கறி சாப்பிடுகிறார்கள். இங்கு 36 ஊழியர்கள் இறால் சாப்பிட விரும்பும் அதேவேளை கோழி இறைச்சியையும் சாப்பிடுகிறார்கள். 51 பேர் இறால் மற்றும் முட்டைகளை சாப்பிட விரும்புபவர்கள் எனினும் அவர்களில் 40 பேர் கோழி இறைச்சி சாப்பிடவில்லை. 32 பேர் முட்டைகளை மட்டும் சாப்பிடுகிறார்கள்.




i. வென்வரிப் படத்தை பிரதி செய்து அதனைப் பூரணப் படுத்துக.


ii. மூன்று வகையான உணவுகளை மட்டுமே சாப்பிட்ட ஊழியர்களைக் குறிக்கும் பிரதேசத்தை நிழற்றிக் காட்டுக.

iii. மூன்று வகையான உணவையும் சாப்பிடும் ஊழியர்களின் எண்ணிக்கையைக் காண்க.


iv. மரக்கறிகளை மட்டும் சாப்பிட்டவர்களின் நிகழ்தகவைக் காண்க.

v. மரக்கறிகளையும் மேற்குறித்த மாமிச உணவு வகைகளில் ஏதாவது ஒரு வகையையும் சாப்பிட்டவர்களின் எண்ணிக்கையைக் காண்க.

10. உருவில் P, Q,R,S ஆகியன ஒரே கிடைத்தளத்தில் உள்ள நான்கு புள்ளிகளாகும். P,Q,R ஆகியன ஒரே நேர்கோட்டில் உள்ளன. PQ = 20m, $S\hat{P}Q = 25^\circ 40'$ ஆகும். வரிப்படத்தை பிரதி செய்து மேற்குறித்த தரவுகளை அதில் சேர்க்க. SQ இன் நீளத்தை திரிகோணகணித அட்டவணையைப் பயன்படுத்தி கிட்டிய மீற்றரில் கணிக்க. Q இலிருந்து RS இற்கு உள்ள குறுகிய தூரம் 12m எனின் $Q\hat{S}R > 33^\circ$ எனக் காட்டுக.




11. உருவில் காணப்படும் முக்கோணி ABC இல் AC இன் நடுப்புள்ளி X உம், BC இன் நடுப்புள்ளி Z உம், AZ இன் நடுப்புள்ளி Y உம் ஆகும். கோடுகள் BY உம் ZX உம் T இல் சந்திக்குமாறு நீட்டப்பட்டுள்ளது.





i. $\triangle ABY = \triangle ZTY$ எனக் காட்டுக.

ii. ABZT ஓர் இணைகரம் எனக் காட்டுக.

iii. ZX = XT என நிறுவுக.

iv. முக்கோணி ATB யினதும் AZC யினதும் பரப்பளவுகள் சமன் எனக் காட்டுக.

12. உருவில் காட்டப்பட்டுள்ள வட்டநாற்பக்கல் PQRS இல் X,Y ஆகியன முறையே PQ,PS ஆகியவற்றின் மீது PX = RS,PY = QR ஆகுமாறு உள்ள புள்ளிகளாகும். C ஆனது PR,XY ஆகிய கோடுகளின் இடைவெட்டும் புள்ளியாகும். வரிப்படத்தை பிரதி செய்து நீட்டப்பட்ட SP மீது M ஐ QR = PM ஆகுமாறு குறிக்க.




i. $\triangle PMX = \triangle QRS$ என நிறுவுக.

ii. $P\hat{M}X = R\hat{P}S$ என நிறுவுக.

iii. $\triangle XYM$ ஐக் கருதுவதன் மூலம் XC = CY என நிறுவுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024



**வரவு அறிந்து செலவு செய்வதில் வல்லவர்களாக விளங்கும் கன்னி இராசி வாசகர்களே!**

தெய்வ பக்தி மிக்கவர்களாக விளங்கும் உங்களுக்கு இந்த சோபகிருது வருடப் புத்தாண்டில் 6 ஆம் இடத்தில் சனி சஞ்சரிக்கின்றார். 8 ஆம் இடத்திற்கு குரு வரப் போகின்றார். ஒக்டோபர் மாதத்தில் உங்கள் ராசியிலேயே கேதுவும் சப்தம ஸ்தானத்தில் இராகுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். எனவே ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஏற்றமும் இறக்கமும் கலந்த வாழ்க்கை அமையும். சோபகிருது வருடம் தொடங்கும் பொழுது ருண ரோக ஸ்தானத்தில் சனி வலுவாக இருக்கின்றார். எனவே சூழ்நிலை உருவாகும். எனவே யோக பலம் பெற்ற நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் தெய்வங்களை தேடிச் சென்று வழிபட்டு வந்தால் நன்மைகள் நடைபெறும்.

### குருப்பெயர்ச்சி!

சித்திரை 9 ஆம் திகதி (22.4.2023) அன்று மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். அப்பொழுது அவரது பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. குரு அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும் அதன் பார்வைக்கு பலன் உண்டு அல்லவா? அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் 2 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலும். நாணயப் பாதிப்பிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பச் சுமை கூடுதலாக இருந்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சுக ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும். கல்வியில் மேம்பாடு பெற வழிபிறக்கும். செய்தொழில் மேன்மையால் சிகரத்தை எட்டும் சூழ்நிலை உருவாகலாம். உடல் நலத்திற்காக செலவிட்ட தொகை குறையும். தாயின் உடல்நலம் சீராகும். முன்னோர் சொத்துக்களை விற்றுவிட்டு அதில் வரும் லாபத்தைக் கொண்டு புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். குருவின் பார்வை விரய ஸ்தானத்தில் பதிவதால் தவிர்க்க முடியாதபடி சில விரயங்கள் ஏற்படத் தான் செய்யும். திடீர் இடமாற்றங்கள் உத்தியோகத்தில் வரலாம். வெளிநாட்டுப் பயணங்கள் கூட ஒரு சிலருக்கு அமையலாம். அனுபவஸ்தர்களின் ஆலோசனை இக்காலத்தில் கைகொடுக்கும்.

### கும்பச் சனி!

கிரகங்களில் வலிமை வாய்ந்தவர் சனி பகவான். அவர் வருடத் தொடக்கத்திலேயே 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். "ருண, ரோக ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது அது நன்மை செய்யுமா? அல்லது மன பயத்தை உருவாக்குமா?"என்று நீங்கள் சிந்திப்பீர்கள். உங்கள் இராசிநாதன் புதன், சனிக்கு நட்பு கிரகமாகும். மேலும் 6 ஆம் இடத்திற்கு அதிபதி 6 ஆம் இடத்திலேயே சஞ்சரிப்பதால் "விபரீத இராஜ யோக" அடிப்படையில் நற்பலன்கள் திடீரென வந்து சேரலாம். அதேசமயம் குறுக்கீடு சக்திகளும் அதிகரிக்கும். பொதுவாக சனியால் உங்களுக்கு உத்தியோக மாற்றம், ஊர் மாற்றம் வரலாம். அரசு வேலை கிடைப்பதில் இருந்த தடை அகலும். ஒருசிலருக்கு ரண சிகிச்சை ஏற்பட்டாலும் அது விரைவில் குணமாகும். கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரம் பெறுகின்றார். பின்னர் 24.08.2023 முதல் மகரத்திற்கு வந்து வக்கிரம் பெறுகிறார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்கு முறையாகப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். இந்த வக்கிர காலத்தில் உங்களுக்கு நன்மை, தீமை இரண்டும் கலந்தே நடைபெறும். அலுவலகப் பணிகளில் கவனம் சிதறாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சகப் பணியாளர்களால் உங்கள் முன்னேற்றம் முடங்குவதற்கு வாய்ப்பு உண்டு. உயரதிகாரிகள் நீங்கள் எந்த வேலை செய்தாலும் அதில் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே குறியாக இருப்பார்கள். இடமாற்றம் வந்தால் அதை மறுக்காமல் ஏற்றுக் கொள்வது நல்லது.

**கன்னி**



உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்

### வளர்ச்சி தரும் வழிபாடு!

புத்தாண்டில் யோகங்கள் அதிகரிக்க புதன்கிழமை தோறும் விரதமிருந்து பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்!

இந்தப் புத்தாண்டில் கொடுக்கல்-வாங்கல்கள் திருப்தியளித்தாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். அஷ்டமத்தில் குருவும் 6 ஆம் இடத்தில் சனியும் சஞ்சரிக்கும் சூழ்நிலை அமைவதால் எதையும் திட்டமிட்டபடி செய்ய இயலாது. திடீர் திடீரென மாற்றங்கள் வந்து சேரும். புத்திசாதுரியமாகச் செயற்பட்டால் மட்டுமே நிறைவு காண இயலும். குடும்பத்தில் கருத்து மோதல்கள் ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். விரயங்களை சுப விரயங்களாக மாற்றிக் கொள்ளவும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவது. பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்தலாம். உத்தியோகத்தில் இனிமை தராத விதத்தில் இடமாற்றங்கள் வரலாம்.

# புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்!

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலமே ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ள இயலும். அடுத்தவர்கள் உங்களிடம் ஒப்படைத்த பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும் பொழுது மிகமிக கவனமாக இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிட வேண்டாம். கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகி கவலையை அதிகரிக்கச் செய்யும் நேரம் என்பதால் முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்வது நல்லது. 22.04.2023 அன்று குரு பகவான் உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்திற்கு வரப்போகின்றார். 08.10.2023 இல் மீன இராசிக்கு இராகுவும் கன்னி இராசிக்கு கேதுவும் செல்கின்றார்கள். இடையில் மூன்று முறை சனி-செவ்வாயின் பார்வை ஏற்படுகின்றது. இக்காலத்தில் நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாக இருக்கலாம். நேசம் மிக்க உறவினர்கள் பாசம் காட்டாமல் விலகலாம். வட்டமிடும் கழுகுகள் போல வஞ்சகர்கள் சுற்றி நிற்பர். அச்சத்தை விட்டு அமைதியைக் காணவும். உச்சத்தை தொட்டு உயர்ந்த நிலையை அடையவும் சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைய வேண்டுமானால் சாமி துணை உங்களுக்குத் தேவை. உங்கள் சுய ஜாதகத்தில் வலிமை வாய்ந்த திசாபுத்தி நடைபெறுமேயானால் உங்களுடைய எண்ணங்கள் ஓரளவேனும் நிறைவேறும். பலமிழந்த திசாபுத்திகள் நடைபெறுமேயானால் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்காது. பணத் தேவை அதிகரித்து கடன்வாங்கும்

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

08.10.2023 அன்று மீன இராசியில் இராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இக்காலத்தில் உங்கள் இராசியிலேயே கேதுவும் ஏழாமிடத்தில் இராகுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். எனவே சர்ப்ப தோஷத்தின் ஆதிக்கம் வருகின்றது. சப்தம ராகுவால் குடும்பத்தில் அமைதிக் குறைவு ஏற்படலாம். யாரையும் நம்பி நீண்டதூரப் பயணங்கள் சென்றால் அதனால் விரயங்களே அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து வரும் அழைப்புகள் திருப்தி தராது. ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். அரைகுறையாக பல பணிகள் நிற்கும். பொறுமையும் நிதானமும் தேவைப்படும் நேரமிது. குடும்பத் தகவல்களை மூன்றாம் நபர்களிடம் பகிர்ந்து கொள்வதன் மூலம் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் எதிர்பாராத இடமாற்றம் இதயத்தை வாட வைக்கும். இதுபோன்ற நேரங்களில் முறையாக சர்ப்ப சாந்திப் பரிகாரங் களைச் செய்தால் தடைகள் தானாக விலகும்.

### குரு-சனி வக்கிரம்!

12.09.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. எனவே இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. வீண் பழிகளும் விரயங்களும் வந்து கொண்டேயிருக்கும். வாங்கிய இடத்தை விற்கக் கூடிய நிலையும் அதனால் வாட்டமும் ஏற்படும். பத்திரப் பதிவில் சிக்கல்கள் வரலாம். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் எவ்வளவு திறமையாக நீங்கள் வேலை பார்த்தாலும் அதற்குரிய அங்கீகாரம் கிடைக்காது. வீண்பிடிவாதத்தை விலக்கிக் கொள்வது நல்லது. 27.06.2023 முதல் 23.08.2023 வரை கும்ப இராசியிலும் பிறகு 24.08.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனி வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் பிள்ளைகள் வழியில் சில பிரச்சினைகள் தலைதூக்கலாம். "கடன் சுமை கூடிக்கொண்டே செல்கின்றதே"என்று கவலைப்படுவீர்கள். கடமையில் தொய்வு ஏற்படும். சினத்தின் காரணமாக பணத்தை விரயம் செய்ய நேரிடும். உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதன் மூலம் உறவினர் பகை அதிகரிக்கும். இதுவரை நட்பாக இருந்தவர்கள் பகையாக மாறி மனச் சஞ்சலத்தை ஏற்படுத்துவர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

Telephone - 021 228 0037 Regd No pa/47 of 10-02-1971

## பணிநிலை விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

எமது சங்கத்தில் கீழ் குறிப்பிட்ட விபரப்படியான பணிநிலைகளுக்கு வெளிவாரியாக தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 03.05.2023 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர். கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) - பரந்தன் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். விண்ணப்பிக்கும் பதவியினை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும் என்பதை அறியத் தருவதுடன் பதவிகள் பின்வருமாறு

பதவி :- கணக்குப் பதிவாளர் (குறியீட்டு இல - 301/10) (பதவி வெற்றிடம் - 01)
சம்பள அளவுத்திட்டம் :- 19745-225X10-250X10-24495 (சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் / வெளிக்கள உத்தியோகத்தர் / எழுதுநர் / காசாளர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் / வெளிக்கள உத்தியோகத்தர்/ எழுதுநர் / காசாளர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது
ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/இதற்கு சமனான தகைமை/மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட (NICD) டிப்ளோமா பரீட்சையில் சித்தி. அல்லது
இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் துறைப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

பதவி :- காசாளர் (குறியீட்டு இல - 306/11) (பதவி வெற்றிடம் - 01)
சம்பள அளவுத்திட்டம்:-19280-190X10-210X10-23280 (சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத் திட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் அல்லது
ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் காசாளர் / விற்பனை தொடர்பான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம் /அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த உயர்தரப் பத்திர பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் காசாளர் / விற்பனை தொடர்பான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

பதவி :- எழுதுநர் (குறியீட்டு இல - 302/11) (பதவி வெற்றிடம் - 01)
சம்பள அளவுத்திட்டம் :-19280-190X10-210X10-23280
(சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/கணக்காய்வு எழுதுநர்/ காசாளர்/கணனிப் பக்க உருவாக்குநர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது
ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் / பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல்/ கணக்குப் பதிவியல் தொடர்பான பயிற்சிநெறிக்கான சான்றிதழ். அல்லது
இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம் /
க.பொ.த உயர்தரப் பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

பதவி :- எழுதுநர் (குறியீட்டு இல - 302/12) (பதவி வெற்றிடம் - 01)
சம்பள அளவுத்திட்டம் :- 18820-170X10-185X10-22370
(சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/கணக்காய்வு எழுதுநர்/ காசாளர்/கணனிப்பக்க உருவாக்குநர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் எழுதுநர்/ காசாளர்/கணனிப்பக்க உருவாக்குநர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/ அல்லது
ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில்/பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல்/கணக்குப் பதிவியல் தொடர்பான பயிற்சிநெறிக்கான சான்றிதழ்.
அல்லது
இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.
ஈ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

பதவி :- கிளை முகாமையாளர் (குறியீட்டு இல- 208/13)(பதவி வெற்றிடம்- 02)
சம்பள அளவுத்திட்டம் :- 18360-160X10-170X10-21660
(சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது
ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த. சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் உட்பட 03 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி

பதவி :- கிளை முகாமையாளர் (குறியீட்டு இல- 208/14) (பதவி வெற்றிடம்- 02)
சம்பள அளவுத்திட்டம் :- 17900-155X10-165X10-21100
(சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். /கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./ அல்லது
ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி /க.பொ.த. சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி , கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

பதவி :-கிராமியவங்கி முகாமையாளர் (குறியீட்டு இல-205/12)(பதவி வெற்றிடம் -01)
சம்பள அளவுத்திட்டம் :- 18820-170X10-185X10-22370
கல்வித்தகைமைகள் :- (சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது
ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி /
க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03பாடங்களுடனான சித்தியுடன் நிதிச்செயற்பாட்டுடன் தொடர்புடைய கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

பதவி :- சாரதி (குறியீட்டு இல- 312/13) (பதவி வெற்றிடம் - 03)
சம்பள அளவுத்திட்டம் :- 18360-160X10-170X10-21660
(சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) 05ம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து-லொறி-பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

பதவி :- சாரதி (குறியீட்டு இல- 312/14) (பதவி வெற்றிடம் - 01)
சம்பள அளவுத்திட்டம் :- 17900-155X10-165X10-21100
(சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) 05ம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து-லொறி-பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

பதவி :- லொறிப்பாதுகாவலர் (குறியீட்டு இல- 314/16)(பதவி வெற்றிடம் - 03)
சம்பள அளவுத்திட்டம் :- 16975-135X10-150X10-19825
(சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

பதவி :- எரிபொருள் நிரப்புனர் (குறியீட்டு இல- 313/14) (பதவி வெற்றிடம் - 04)
சம்பள அளவுத்திட்டம் :- 17900-155X10-165X10-21100
(சுற்றுநிருபம் 01/2021 இன் படி)
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதரபடிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
வயது எல்லை :- 18 - 45 (சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.
ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்- 08ம் தரக் கல்விச் சான்றிதழ்.

**ஏனைய விபரங்கள்**

- கூட்டுறவுச் சங்க பணியாளராயின் அந்தந்த கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
- குறித்த பதவிகளுக்கு தெரிவாகும் விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்த வேண்டும்.
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி கல்வித்தகைமை சான்றிதழ். வதிவிடச்சான்றிதழ். பிறப்புச்சான்றிதழ் ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை இணைத்து தலைவர் கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் A09 வீதி பரந்தன் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகவோ 03.05.2023ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
- பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப் படிவங்களும் சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு நெறியாளர் குழுவிற்கு உரிமை உண்டு.

திரு.ம.பிரேமரான் தலைவர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்.பரந்தன்.

(C-6387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது அற்றது போற்றி உணின்
- திருவள்ளுவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மீண்டும் தலைதூக்கும் கொரோனாப் பெருந்துயர்

கொரோனாத் தொற்று மீண்டும் தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இத்தொற்றுக்கு ஆளாகிய சிலர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரியவருகிறது.

21ஆம் நூற்றாண்டின் உலகப் பெருந்தொற்றாக அடையாளப்படுத்தப்படும் கொரோனாத் தொற்று இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களைக் காவு கொண்டது.

எந்த நாடும் தப்பவில்லை என்று கூறுமளவில் 2019, 2020ஆம் ஆண்டுகளில் உலகை உலுக்கிய கொரோனாவால் பாதிக்கப்படாதவர்கள் எவரும் இல்லை எனலாம்.

அதிலும் உயிரிழந்தவர்களின் உடலைக் கூட உறவுகள் பார்க்க முடியாத அளவில் தனிமைப்படுத்த வேண்டிய கொடுந்தொற்றாக கொரோனா விளங்கியது.

ஆம், பெற்ற தாயை, பெற்ற தந்தையை, பெற்ற பிள்ளையை கொரோனாத் தொற்றுக்கு பறிகொடுத்துவிட்டு, அவர்களுக்கு இறுதிச் சடங்கைச் செய்ய முடியாமலும் எரியூட்ட இடமில்லாமலும் பொதுமக்கள் பட்ட அந்தரத்தை இந்தியப் பெருந்தேசத்தில் கண்ணுற்றபோது, மனித வாழ்வே வெறுத்துப் போனது.

இதற்கு மேலாக, இத்தாலி நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் கொரோனாத் தொற்றால் மாண்டபோது அந்த நாட்டு ஜனாதிபதி கண்ணீர் விட்டு அழுதார்.

ஒரு பெரும் கோடீஸ்வரர் தனது மனைவியையும் பிள்ளைகளையும் கொரோனாவுக்குப் பலி கொடுத்தபோது, வேதனை தாளமுடியாமல், தனது செல்வங்களையெல்லாம் வீதியில் வீசிவிட்டு, மாடியில் இருந்து குதித்து உயிரை மாய்த்த சம்பவம் இத்தாலியில் நடந்தபோது, அது கண்டு கண்ணீர் விட்டு அழாதார் இல்லை எனலாம்.

இவ்வாறாக, மனிதப் பேரவலத்தை ஏற்படுத்திய கொரோனாப் பெருந்தொற்று மீண்டும் தலைதூக்கியுள்ளது.

எமது அண்டை நாடான இந்தியாவில் கொரோனாத் தொற்று வேகமெடுப்பதான தகவல்கள் வெளியாகிய கையோடு, எங்கள் யாழ்ப்பாணத்திலும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்ற தகவலும் அதில் ஒருவர் நேற்று (19) உயிரிழந்தார் என்ற செய்தியும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகும்.

எனவே கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை நன்கு அறிந்து வைத்துள்ள நாம் மீண்டும் கொரோனாத் தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

இதற்காக பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புகள் சமூக நிலையங்களில் கொரோனா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களைத் துலங்க வைப்பது மிகவும் அவசியமானதாகும்.

# தேர்தலை உடன் நடத்துங்கள் அல்லது வேட்பு மனுக்களை இரத்து செய்யுங்கள்

## உதய கம்பன்பில எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்புக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எதுல் கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,நகர சபைகள் மற்றும் பிரதேச சபை தேர்தல் சட்டத்தின் பிரகாரம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்துவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி அறிவித்தது.

தேர்தல் தொடர்பில் நிதியமைச்சுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாமல் ஆணைக்குழு தேர்தல் தொடர்பான அறிவிப்புக்களை விடுத்ததால் நிதி விடுவிப்பை நிதியமைச்சு முடக்கியது.

தேர்தல் ஆணைக்குழு வாக்கெடுப்புக்கு திகதி அறிவிப்பதும் பின்னர் நிதி நெருக்கடியால் தேர்தல் வாக்கெடுப்பு ஒத்திவைப்பதும் வழமையாகிவிட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழு, நிதியமைச்சு ஆகிய தரப்பினரது முரண்பாடான செயற்பாடுகளினால் வேட்பு மனுத் தாக்கல் செய்து விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் சட்டத்தின் 102ஆவது உறுப்புரையில், "தேர்தல் ஒன்றுக்கு போட்டியிட தீர்மானிக்கும் அரச சேவையாளர் வேட்பு மனு தாக்கல் செய்து, தேர்தல் பணிகள் நிறைவு பெறும் வரை சேவையில் ஈடுபடக்கூடாது" என குறிப்பிடப்பட்டுள்ளது. விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பில் தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

தேர்தல் இழுபறி நிலையில் உள்ள பின்னணியில் விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தை மாத்திரம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதைய பொருளாதார பாதிப்பு, வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் அடிப்படை சம்பளத்தை கொண்டு எவ்வாறு தேவைகளை நிறைவேற்ற முடியும்.

தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். அரசியலமைப்புக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்ய வேண்டும். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டினால் அரச சேவையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றார். (ம-7,9)

## வடமராட்சியில் மணல் அகழ்வு சந்தேக நபர் ஒருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி வல்லிபுரத்தை அண்டிய பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு வாகனங்களை சிறப்பு அதிரடி படை கைப்பற்றியதுடன் சந்தேக நபர் ஒருவரும் நேற்று மதியம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட ஒரு கன்டர் ரக வாகனத்தையும், ஒரு வடி ரக வாகனத்தையும் சுற்றி வளைத்த குடத்தனை சிறப்பு அதிரடி படையினர் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

அண்மைக்காலமாக வல்லிபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில் சிறப்பு அதிரடி படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ம-7,9,60)

## அக்குரனை பள்ளிவாசலுக்கு வெடிகுண்டு மிரட்டல்

(கொழும்பு)

அக்குரண பகுதியிலுள்ள பள்ளி வாசலொன்றுக்கு வெடிகுண்டு மிரட்டல் ஒன்று வந்துள்ளது.

அலவதுகொட பொலிஸ் நிலையத்திற்கு நேற்று முன்தினம் அதிகாலை அழைப்பு கிடைத்தது என்றும் இதனையடுத்து விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி அறிவுறுத்தியுள்ளதாகவும் தகவல் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில் வெடிகுண்டு மிரட்டல் குறித்து உளவுத்துறைக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை என பாதுகாப்பு அமைச்சின் ஊடக பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார். (ம-7,9)

## கச்சா எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை [illegible] கண்டுள்ளது.

பிரன்ட் கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை 7 டொலர்கள் [illegible]துடன், [illegible] 84.70 ஆக பதிவாகியுள்ளது. (நி)

## யாழ்.மாநகரசபையின் தீயணைப்பு வாகன சில்லினுள் சிக்குண்ட தீயணைப்பு வீரர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் தீயணைப்பு வாகன சில்லினுள் சிக்குண்ட தீயணைப்பு படை வீரரொருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, தீயணைப்பு வாகனம் ஹான்ட் பிரேக் போடப் படாமல் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வாகனம் மெது மெதுவாக நகரவே அதனை கண்ட தீயணைப்பு படை வீரரொருவர் அதனை நிறுத்துவதற்காக கல் ஒன்றை சில்லுக்கு முன்பாக வைக்க முயன்றுள்ளார். இதன்போது சில்லுக்குள் அகப்பட்டு படு காயமடைந்தார்.

காயமடைந்த தீயணைப்பு படை வீரர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ம-33)

## சதுர்த்தி உற்சவம்

யாழ்.வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை 2.30 மணிக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வசந்தமண்டபபூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வருவார் என பிரதமகுரு சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## வவுனியாவைச் சேர்ந்த ஐவர் தமிழகத்தில் தஞ்சம்

இலங்கையில் இருந்து படகு மூலம் 5 பேர் நேற்று அதிகாலை தமிழகம் அரிச்சல்முனை பகுதிக்கு சென்றுள்ளனர்.

வவுனியா - தேக்கன் தோட்டத்தை சேர்ந்த, ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை மற்றும் 3 பிள்ளைகள் தமிழகத்திற்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

இவர்களிடம் தமிழக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## சபாநாயகர் தலைமையில் கட்சித்தலைவர்கள் கூட்டம் இன்று

(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று (வியாழக்கிழமை) பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற வாரத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப் படவுள்ளன.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அண்மையில் குறிப்பிட்டார்.

எனினும், எதிர்க்கட்சிகள் இதற்கு கடுமையான எதிர்ப்பினை தெரிவித்துள்ளன. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 05

1976 இல் இந்திராகாந்தி அரசாங்கம் மற்றொரு ஒப்பந்தத்தை செய்தது. அதன்படி இந்திய மீனவர்கள் கச்சதீவை சட்டபூர்வமாக பயன்படுத்த முடியாது போனது.

கச்சதீவு திரும்பப் பெறப்படும் என்று தமிழகம் மீண்டும் மீண்டும் சபதம் செய்து வருகிறது. 1991 இல் ஜெயலலிதா முதல்முறையாக தமிழக முதல்வராக பதவியேற்று ஆட்சி செய்தபோது, இத்தீவை மீட்டெடுக்கக் கோரி மாநில அரசு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.1994 இல் கச்சதீவை நீண்ட கால குத்தகை மூலம் திரும்ப பெற வேண்டும் என மத்திய அரசை நிர்ப்பந்தம் செய்தார். பிறகு 2001 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த போதும் கச்சதீவு தொடர்பாக உரிமை மீட்டெடுக்கப்பட வேண்டும் என்று 2004 இல் இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதினார்.

பிறகு ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது ஓகஸ்ட் 2008 இல் இந்திய உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கைத் தொடர்ந்தார். அந்த வழக்கில், 'கச்சதீவு தொடர்பாக 1974 மற்றும் 1976 இல் ஏற்படுத்தப்பட்ட இரு ஒப்பந்தங்கள் இரத்து செய்து உத்தரவிடப்பட வேண்டும். கச்சதீவு மீண்டும் இந்தியாவின் அங்கமாக்கப்பட வேண்டும். ஏனெனில், மேற்படி கச்சதீவு தாரை வார்ப்புக்கு இந்திய பாராளுமன்றத்தில் இரு அவைகளைக் கூட்டி ஒப்புதல் பெறப்படவில்லை' என்று வழக்கு தொடுத்தார்.

இதில் 1960 இல் மேற்கு வங்காளத்தின் ஒரு பகுதியை பாகிஸ்தானுக்கு மத்திய அரசு கொடுக்க முயன்ற போது அதைத் தடுத்து உத்தரவிட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பை மேற்கோள் காட்டியிருந்தார்.

அஃதாவது இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை, பாராளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு, இந்திய அரசியலமைப்பு சட்டதிருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என 1960 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு முற்றிலும் முரணாக, பாராளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் இல்லாமல், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் வாயிலாக கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டு இருக்கிறது என்று கூறியிருந்தார்.

மீண்டும் 2011 மற்றும் 2012 இல் ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்த போது கச்சதீவை மீட்கும் முயற்சியில் தமிழக அரசு உச்ச நீதிமன்றம் சென்றது.

கச்சதீவு சர்ச்சைக்குரிய பிரதேசம் அல்ல. கச்சதீவு குறித்த தங்கள் நிலைப்பாட்டை இந்திய அரசு ஏற்கனவே அறிவித்து விட்டது. அது 1976 ஆம் ஆண்டு. கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்படவில்லை, கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதை இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. அதில் எந்த சர்ச்சையும் இல்லை என்று நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையின்படி, அதில் கூறப்பட்டுள்ளதாவது: "இந்தியாவுக்குச் சொந்தமான எந்தப்பகுதியும் விட்டுக் கொடுக்கப்படவில்லை அல்லது இறையாண்மையை விட்டுக் கொடுக்கவில்லை. ஏனெனில் கேள்விக்குரிய பகுதி சர்ச்சைக்குரியது மற்றும் ஒருபோதும் வரையறுக்கப்படவில்லை." எனவே, கச்சதீவு இலங்கைக்கு விடப்பட்டது என்ற செல்வி ஜெயலலிதாவின் வாதம் சரியானது அல்ல, உத்தியோகபூர்வ பதிவுகளுக்கு முரணானது என்றது. இது சம்பந்தமான வழக்குகள் தற்போதும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.இந்திய உச்ச நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க முடியும்.

## இந்திய- இலங்கை மீனவர் பிரச்சினை

இந்திய -இலங்கை மீனவர் பிரச்சினை என்பது பாக்குநீரிணையில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள், இலங்கை நீர்ப்பரப்பில் மீன்பிடிப்பதால் ஏற்பட்டுள்ள பிரச்சினையை குறிக்கும்.

**1974 இல் இந்தியா இலங்கை நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தப்படி இந்தியா கச்சதீவை விட்டுக் கொடுத்தது. இதன்படி தமிழக மீனவர்களுக்கு மீன்பிடி உரிமமும் சுதந்திரமும் வழங்கப்பட்டது. 1976 இல் மீண்டும் ஓர் ஒப்பந்தம் இந்தியா-இலங்கை இடையே ஏற்பட்டது. இந்த ஒப்பந்தப்படி தமிழக மீனவர்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமம் பறிக்கப்பட்டதாக இலங்கை அறிவித்தது.**

## கடல் சட்டம் பற்றிய ஐ.நா மாநாடு, 1982 (U.N. Convention on the law of Sea, 1960-UNCLOS)

கடல் சட்டம் பற்றிய ஜெனிவா மாநாடு, 1958 நாடுகளின் கடல் பரப்பின் மீதான உரிமைக் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் 1958 இல் ஜெனிவாவில் கடல் சட்டம் பற்றிய சர்வதேச மாநாடு கூட்டப்பட்டது.

இம்மாட்டின் முடிவில் நான்கு தீர்மானங்கள் ஏற்கப்பட்டன. அவை: (i) எல்லையோரக் கடல் மற்றும் எல்லையோரக் கடலை அடுத்த மண்டலம் பற்றிய மாநாட்டுத் தீர்மானம் (ii) ஆழ்கடல்கள் பற்றிய மாநாட்டுத் தீர்மானம் (iii) மீன்பிடித்தல் மற்றும் வாழ்வாதார வளங்களைப் பாதுகாத்தல் பற்றிய மாநாட்டுத் தீர்மானம் (iv) கண்டத்திட்டு பற்றிய மாநாட்டுத் தீர்மானம்.

1958 ஆம் ஆண்டு மாநாட்டில் ஏற்கப்பட்ட நான்கு தீர்மானங்களையும் எல்லா நாடுகளும் முழுமையாக ஏற்று நடைமுறைப்படுத்தவில்லை. சில நாடுகள் அந்நான்கினுள் சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்தின. இவற்றின் காரணமாக 1958 ஆம் ஆண்டு மாநாடு அதன் நோக்கத்தில் முழு வெற்றி பெறவில்லை.

எனவே கடல் சட்டம் பற்றிய மூன்றாவது மாநாடு கூட்டப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1970, டிசெம்பர், 17 அன்று ஐ.நாவின் பொதுசபையில் இரண்டு முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை:

(i)தேசிய அதிகாரவரம்பிற்கு அப்பால் உள்ள கடல் அடித்தளம் கடல் தரை மற்றும் அடி மண் தொடர்பான கோட்பாடுகள் பற்றிய அறிக்கை.

(ii) கடல்சட்டம் பற்றிய மூன்றாவது ஐ.நா மாநாட்டை நடத்துவது என்று முடிவு செய்யப்படுகிறது.

அதன்படி மூன்றாவது மாநாட்டின் முதல் அமர்வு 1973 டிசெம்பர் 3 முதல் 15 திகதிகளில் நியூயோர்க்கில் நடைபெற்றது. அதன்பிறகு 1982 வரை பத்து அமர்வுகளாக நடைபெற்ற அம்மாநாட்டின் இறுதியில் 1982 ஏப்ரல் 30 அன்று கடல் சட்டம் பற்றிய ஐ.நா மாநாட்டுத் தீர்மானம் ஏற்கப்பட்டது. இக் குழுவின் தலைவராக இலங்கையின் ஐக்கிய நாடுகளிற்கான நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் சேர்ளி அமரசிங்க நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தீர்மானத்திற்கு ஆதரவான 130 நாடுகளின் பெரும்பான்மை ஆதரவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அமெரிக்கா, இஸ்ரேல், துருக்கி, வெனிலா ஆகிய நாடுகள் அதற்கு எதிராக வாக்களித்தன. சோவியத் யூனியன், பிரிட்டன், பெல்ஜியம், நெதர்லாந்து, இத்தாலி, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. 1982 செப்டெம்பர் மாதத்தில் அம்மாநாட்டுத் தீர்மானத்தில் நாடுகள் ஒப்பமிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

1982, டிசெம்பர் 10 அன்று ஜமைக்காவில் உள்ள மான்டிகோபே என்னுமிடத்தில் அம்மாநாட்டுத் தீர்மானம் நாடுகளால் கையொப்பமிடப்பட்டது. அப்போது சோவியத் யூனியன் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது. இறுதியாக 119 நாடுகள் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு ஒப்பமிட்டன.

இரண்டு ஆண்டுகள் வரை ஒப்பமிடக் கால அவகாசம் வழங்கப்பட்டது. 1988 நவம்பர் வரையில் 159நாடுகள் ஒப்பமிட்டிருந்தன. அதில் 60 நாடுகள் தீர்மானத்தை மறு ஏற்புறுதி செய்திருந்தன. எனவே 60 ஆவது நாடாக கயானா ஏற்புறுதி செய்த நாளான 1994 நவம்பர் 16 முதல் இம் மாநாட்டுத் தீர்மானம் செயலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. இலங்கை 1994 ஜூலை 19 அன்று ஏற்புறுதி செய்தது. இந்தியா 1996 ஜூன் 29 அன்று ஏற்புறுதி செய்தது. ஜூன் 2016 நிலவரப்படி, 167 நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் இதில் இணைந்துள்ளன.

## கடல் சட்டம் பற்றிய ஐ.நா மாநாடு 1982 இன் முக்கிய அம்சங்கள்

1982 ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய ஐ.நா மாநாட்டுத் தீர்மானம் 320 சரத்துகளைக் கொண்டதாகவும் 17 பாகங்களாகப் பிரிக்கப்பட்டும் உள்ளது. அதனுடன் 9 இணைப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1) இம்மாநாட்டுத் தீர்மானத்தில் எல்லையோரக் கடலின் அகலம் 12 கடல் மைல்கள் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2) தீங்கற்ற பாதையுரிமை கூடுதல் துல்லியத்துடனும் கூடுதல் விரிவுடனும் வரையறுக்கப்பட்டது.

3) "தனியுரிமை பொருளாதார மண்டலம்" எனும் புதிய கருத்தாக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு கரையோர நாடுகளின் கடற்கரையிலிருந்து 200 கடல் மைல்கள் வரை உள்ள பகுதி அந்நாட்டின் தனியுரிமை பொருளாதார மண்டலமாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் தாக்கி...

இராமசாமி (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

அவரது மனைவி காயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவரது மகனான 25 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் மதுபோதைக்கு அடிமையாகியுள் ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் மதுபோதையில் இருந்தபோது, தமது தந்தையை தாக்கி கொலை செய்ததாக தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இன்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன், சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,9,316)

## ஆசிரியர்களுக்கு...

மாணவர்களின் கல்வியை பணயக் கைதிகளாக ஆக்குவதை ஒரு போதும் அனுமதிக்க போவதில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அடுத்த வாரத்திற்குள் ஆசிரியர்கள் விடைத்தாள் மதிப்பீட்டு பணிக்கு செல்ல மறுத்தால் அவசரச் சட்டத்தின் கீழ் கல்வி அத்தியாவசிய சேவையாக மாற்றப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

## இனப் பிரச்சினை...

அவர் மேலும் தெரிவிக்கையில், சமகாலத்தில் இந்த மண்ணில் குறிப்பாக பூநகரி, மாங்குளம், பரந்தன் சந்தி, உருத்திரபுரம் ஆகிய பகுதிகளில் ஆலமரங்கள் நாட்டப்பட்டு புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் தற்போது அதிகளவான புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகள் வடக்கு கிழக்கில் மாத்திரமல்லாது கச்சதீவிலும் புத்த விகாரைகள் கட்டப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வலிகாமம் வடக்கில் உள்ள பல தேவாலயங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் பலாலி மற்றும் மயிலிட்டி போன்ற இடங்களில் உள்ள தேவாலயங்களும் அழிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை திசைதிருப்பும் வகையிலும் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும் இவ்வாறு சில மத நிறுவனங்களை உருவாக்கி அரசியல் லாபங்கள் தேடப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ம-7,9)

## தமிழர் தாயகத்...

ஏற்பாட்டுக்குழுவால் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக பிரதான தூபி வளாகத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜயகுமார் தலைமையிலும் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். நல்லூரில் தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் அனுஷ்டிப்பு இடம்பெற்றது.

மன்னாரில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மன்னார் கிளையின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் நினைவேந்தல் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டுப் பிரதேசத்தில் நீலன் அறக் கட்டளையின் ஏற்பாட்டில் நினைவேந்தல்நிகழ்வும் அடையாள உண்ணாவிரத போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் அன்னை பூபதியின் நினைவேந்தல் தொடர்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (ம-7,9,33,104)

## கப்பல் சேவை...

அமைப்புகளுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கப்பல் சேவைக்கு நான்கு நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன என்றும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்குத் தேவையான அனுமதி இதுவரை இந்திய அதிகாரிகளால் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் காரைக்கால் துறைமுகத்துக்கும் இடையிலான கப்பல்சேவையை தொடங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7,9)

# அதிகளவான வெப்பம் தொடர்பில் குழந்தைகள், முதியவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை இன்று அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்தில் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் குருநாகல் மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் வெப்பநிலை அவதானத்திற்குரிய மட்டத்திற்கு உயரக்கூடும் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, வெப்பமான கால நிலையில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அரச ஆயுர்வேத வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேபோல், அதிக வெப்பநிலையால் ஏற்படும் உடல்நலப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்குக் கவனமாகப் பின்பற்ற வேண்டிய சில நடவடிக்கைகளை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

1. நீங்கள் தாகம் எடுக்கும் வரை இருக்காமல் முடிந்த அளவு தண்ணீர் (வயது வந்தவர்கள் நாளொன்றுக்கு குறைந்தது 2.5 லீற்றர்) குடிக்கவும்.
2. தாகத்திற்கு, தண்ணீருக்கு பதிலாக இனிப்பு பானங்கள் அருந்துவதை தவிர்க்கவும்.
3. காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை சூரிய ஒளியில் இருக்கும் நேரத்தை குறைக்கவும்.
4. முடிந்தவரை பருத்தி ஆடைகளை அணியவும்.
5. வெளியில் சுற்றித் திரியும்போது இயன்றளவில் குடைகள் மற்றும் தொப்பிகளைப் பயன்படுத்துதல்.
6. வயதானவர்கள் அல்லது நோய் வாய்ப்பட்டவர்கள் மற்றும் சிறு குழந்தைகள் இந்த நிலையில் பாதிக்கப்படுவதற்கான அதிக ஆபத்து உள்ளது. எனவே அவர்கள் தொடர்பில் விசேட கவனம் தேவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## குரங்...

கடந்த 11ஆம் திகதி விவசாய அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், இலங்கை விலங்குகளை சீனாவிலுள்ள உயிரியல் பூங்காக்களுக்கு வழங்குமாறு சீன பிரதிநிதிகள் குழு கோரிக்கை விடுத்துள்ளதாக கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## நாட்...

பிட்டுள்ளார்.

கடந்த காலப் பகுதியில், ஆசியாவில் சுமார் 600,000 மலேரியா நோயாளிகள் இறந்துள்ள நிலையில் கடந்த ஆண்டில் இலங்கையில் 37 நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று மலேரியா நோய்க் கட்டுப்பாட்டு இயக்கம் தெரிவித்துள்ளது. (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1546
விருச்சிகம் 5 1 1 3 9 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1121
G 07 34 38 69

கொவிசெத
திகதி 2023.04.19
சீட்டிழுப்பு இலக்கம் 3333
O 05 23 34 71
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1439
M 24 59 61 62 72

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.19
சீட்டிழுப்பு இலக்கம் 400
மீனம் 09 10 33 57 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/04/19
சீட்டிழுப்பு இலக்கம் 5091
G 4 4 5 1 4 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2065 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.04.19 தினம் புதன்கிழமை
Q 16 29 68 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,254,780/-
DLB

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.19
சீட்டிழுப்பு இல : 4226
வர்ணம் : நீலம்
ரூ. 3,542,400/-
வெற்றி இலக்கங்கள் 02 15 44 64 L

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,035,752.60
திகதி 2023-04-19
வெற்றி வாரம் 3777
வர்ணம் பச்சை
29 32 36 46
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,948,380/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 18 05 20 30 32
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 323,848,605.40
1241
இள நீலம்
2023.04.19 புதன்கிழமை
DLB தொலை பேசி : 011-2 333 546-47

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1914
சீட்டிழுப்பு திகதி 2023-04-19
12 15 37 64 G
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 42,072,798/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1891
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.04.19
ரூ. 3,766,860/-
09 46 64 75 H


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 4 இலட்சம்
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை (15311)

**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.**

**077 076 0389**
**076 911 9371**
**076 739 0413**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை (15311)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**


### கைதடியில் விபத்து ஒருவர் பலி

சாவகச்சேரி, கைதடி பகுதியில் நேற்று இரவு இடம் பெற்ற விபத்தில் பொலிஸ் அதிகாரி யொருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியே இவ்வாறு விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கைதடி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் நேற்று இரவு விபத்து நிகழ்ந்தது.

மோட்டார் சைக்கிளில் சென்ற பொலிஸ் அதிகாரி, பேருந்துடன் மோதி தரையில் வீசப்பட, மற்றொரு வாகனத்தில் மோதி உயிரிழந்துள்ளார் என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.(ம-7,9)


## UK நாட்டில் வேலைவாய்ப்பு

40 வயசுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான உடனடி வேலைவாய்ப்பு Visa 7 நாட்களில் பெற்றுத்தரப்படும். (C-6388)

## Care Giving வேலைவாய்ப்பு

தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்

**Hybrid International Hub (Pvt) Ltd,Jaffna**
**0212221265 0762500098**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15291)

**076 825 7716 (ஆகாஸ்)**

## பணியாளர் தேவை

**பருத்தித்துறை,நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு பின்வரும் பணியாளர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்**

- உணவு பரிமாறுவோர்
- சமையலறை உதவியாளர் நன்கு மரக்கறி வெட்டத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது
- தங்குமிடம் உணவு வழங்கப்படும்
- சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும் (C-6386)

**077 362 0979**

## IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance Grammar Classes, First Class (Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI (15283)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மையப்பகுதியை அண்டிய (திருநெல்வேலி, கொக்குவில், அரியாலை, மானிப்பாய், இணுவில்) பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை

தொடர்புகளுக்கு

**070 119 5424** (15309)


# 33ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் பொன்னன் தியாகராசா



அன்னை மடியில் 24.05.1933
ஆண்டவன் அடியில் 19.03.2023

**"எம் இதயத்தில் குடிகொண்ட எம் அன்பு பாசமலரே"**

மானிப்பாய் மண்ணதனை
மகிழ்வுடனே கைப்பற்றி
பண்பையும் பாசத்தையும்
விதையாக்கி
ஆசையுடன் உரமூட்டி
அழகுபெற செழிப்புடன்
வளத்தெடுத்தீர் ஐவரை

சிந்தனைகள் சிலையாகி
தீர்மானம் ஒன்றாகி
வார்த்தை வரிகளால்
வாழ்க்கைப் பாடத்தை
பக்குவமாய் பரிந்துரைத்து
தலைநிமிர்ந்து நாம் வாழ
தந்தை பணி நீ செய்தாய்

சங்கடங்கள் மத்தியிலும் சலிக்காது
உமக்காய் பணி செய்தோம்
நாம் ஒன்றாய் – ஆனாலும்
ஓயாத கரங்கள், குன்றாத மனவலிமை
அன்பான ஆறுதல் வரிகள்
ஆசை நிறைந்த தூய்மையான புன்னகை
இத்தனையும் நினைக்கையில்
கனக்கிறதே நெஞ்சம்

காலத்தின் தேவையும்
கடவுளின் கட்டளையும்
ஆண்டவன் அடியில்
அன்னையுடன் அகமகிழ்ந்து
ஆனந்தமாக வாழ்வீர் – என
ஆறுதலடைகின்றோம் நாம் இங்கு

**உம் ஆத்மா சாந்தியடைய எம் அன்பு மலர்கள் காணிக்கை**

எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (20.04.2023) வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**எமது குடும்பத் தலைவரை நாம் இழந்து தவித்தபோது எமக்கு சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்**

தில்லையம்பதி, கோண்டாவில். (C-6396) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.